இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 66 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 29 – வெள்ளிக்கிழமை 16 அக்டோபர் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 66 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 29 - Friday 16 October 2026 - Chennai 12 Pages ₹ 5.00

நிர்வாகத் திறனற்ற விஜய் அரசின் சீர்கேட்டைக் கண்டித்து வடசென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் !





கழகத் தலைவர் ஆணைக்கிணங்க சென்னை கிழக்கு, வடக்கு, வடகிழக்கு மாவட்டக் கழகங்கள் சார்பில் – எல் நினோ தீவிரம் மற்றும் வடகிழக்குப் பருவமழையால் ஏற்படக்கூடிய அபாயங்களை அலட்சியப்படுத்துவதையும், மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகளின் மக்கள் நலப் பணிகளை முடக்கும் தமிழக அரசின் நிர்வாகச் சீர்கேட்டையும் கண்டித்து, நேற்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர், திருச்சி என்.சிவா எம்.பி. சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.டி. சேகர், கழக அயலக அணித் தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி., ஆகியோர் கண்டன உரையாற்றினர். இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஜோசப் சாமுவேல், ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், இ.பரந்தாமன், ஜே.ஜே.எபினேசர், தமிழன் பிரசன்னா, டாக்டர் சுபேர்கான் ஏ.பி. பூர்ணிமா, தனி அரசு,எஸ். மணிமுடி, வே.உமாகாந்த், பி.கே. மூர்த்தி, சரிதா மகேஷ் குமார், கூ.பி.ஜெயின் நேதாஜி கணேசன் ஆறுமுகம் கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ராஜேஷ் ஜெயின், ஆர். வரதன் மாவட்டக் கழக நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.எம். தேவன், புனிதவதி எத்திராஜன், இசட். ஆசாத் ஆகியோரும், பகுதிச் செயலாளர்கள் எஸ். ராஜசேகர், எஸ்.முரளி, சொ. வேலு, வி.சுதாகர், வே.வாசு, ஐ.சி.எப். வ. முரளிதரன், எ. நாகராஜன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சமூக நீதிக்கு எதிரானது !

இஸ்லாம் மதம் தழுவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமையைக் காப்பாற்ற

தமிழ்நாடு அரசு உடனடியாக சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும் !

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல் !

சென்னை, அக்.16-

“உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சமூக நீதிக்கு எதிரானது” என்றும், “இஸ்லாம் மதம் தழுவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமைகளைக் காப்பாற்ற தமிழ்நாடு அரசு உடனடியாக சீராய்வு மனுதாக்கல் செய்ய வேண்டும்” எனவும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி அறிக்கை விடுத் துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இஸ்லாம் மதம் தழுவும் பிற்படுத்தப் பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு உரிமை யைக் காப்பாற்ற தமிழ்நாடு அரசு உட னடியாகச் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்

உச்சநீதிமன்றத் தீர்ப்பு

சமூகநீதிக்கு எதிரானது!

சமூகரீதியான பின்னடைவு (social backwardness) ஒரு நாளிலோ ஒரு தலைமுறையிலோ ஏற்படுவதல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்த சமூகக் கட்டமைப்பினால் அடைந்தது. மதம் மாறுவதாலேயே



அது மறைந்துவிடுவதில்லை.

இதுவே சமூக யதார்த்தமாக இருக் கும் நிலையில், “இஸ்லாமைத் தழுவிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு BC (M) பிரிவுக்கான இட ஒதுக்கீடு அளிக்கத் தேவையில்லை” எனும் மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு சமூக நீதிக்கு எதிரானது.

தமிழ்நாடு அரசு உடனடியாக இத் தீர்ப்புக்கு எதிராக சீராய்வு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும். பிற்படுத்தப் பட்ட சமூகங்களில் இருந்து இஸ்லாம் மதத்தை ஏற்பவர்களின் இட ஒதுக் கீட்டு உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

திராவிட மாடல்

அரசில் தீர்மானம்!

கடந்த #DravidianModel அரசில், கிறித்தவர்களாக மதம் மாறும் ஆதி திராவிடர்களுக்கும் இட ஒதுக்கீடு அளிக்கும் வகையில் அரசியலமைப் புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற் கொள்ள ஒன்றிய அரசை வலியுறுத் தித் தீர்மானம் நிறைவேற்றினோம். அந்த முயற்சிகளையும் தற்போதைய தமிழ்நாடு அரசு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

சாதியினால் ஒடுக்குமுறையை எதிர்கொண்ட BC, MBC, SC மக்க ளுக்கு அதனையே அளவு கோலாகக் கொண்டு இட ஒதுக்கீடு அளிப்பதுதான் சமூகநீதிக்கு வழிவகுக்கும். பின்



பற்றும் மதத்தைக் காரணம் காட்டி அந்த உரிமையை மறுப்பது சமூக அநீதியாக அமைந்துவிடும்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கை யில் கூறியுள்ளார்.